දුරකථන
தொலைபேசி
Telephones
011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011-2876169
011-2876181

විද්‍යුත් තැපැල
மின் - அஞ்சல்
E-mail
info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.
No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla

මගේ අංකය
எனது இல.
My No.
PSC/EST/06-05/03/201

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
2020.01.30

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 04/2020

அமைச்சு செயலாளர்கள்,
மாகாண பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்.

**மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தரொருவரால் செய்யப்படும் வேண்டுகோளுக்கு அமைய மத்திய அரசாங்கத்தின் நேரொத்த பதவியொன்றுக்கு இடமாற்றம் செய்தல்**

மத்திய அரசாங்கத்தின் பதவியொன்றுக்கு நேரொத்த மாகாண அரசாங்க சேவையின் பதவியொன்றில் நிரந்தப் பதவியொன்றை வகிக்கும் தாதியர், நிறைவுகாண், துணை மருத்துவர் மற்றும் ஆசிரியர் சேவை போன்ற மத்திய அரசாங்கத்தின் கீழ் ஆரம்பப் பயிற்சி வழங்கப்பட்டதன் பின்னர் மாகாண அரசாங்க சேவையில் நியமனமொன்றைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தரொருவரின் அல்லது அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் கீழ் மாகாண அரசாங்க சேவையில் நியமனமொன்றைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தரொருவரின் வேண்டுகோளின் பேரில் அந்த உத்தியோகத்தர் மத்திய அரசாங்கத்தின் பதவியொன்றுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்பு அதிகாரம் கையளிக்கப்பட்ட நியமன அதிகாரியொருவரால் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய இடமாற்றம் செய்ய முடியும்.

02. பின்வரும் நிபந்தனைகளை பூரணப்படுத்தும் முதலாவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள மாகாண அரசாங்க சேவைக்குரிய உத்தியோகத்தரொருவர் மாத்திரம் மாகாண அரசாங்க சேவையின் பதவிக்குரிய நேரொத்த மத்திய அரசாங்கத்தின் பதவியொன்றுக்கு நியமிக்கப்படுவதற்கு தகைமைப் பெறுகின்றார்.

i. மாகாண அரசாங்க சேவையின் நிறைவேற்றுநர் மட்டத்திலான உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் மட்டத்தைச் சேர்ந்த விசேட தரத்தின் உத்தியோகத்தர்களை இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மத்திய அரசாங்கத்தின் பதவியொன்றுக்கு நியமிக்க முடியாது.

ii. உத்தியோகத்தரொருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்பட்டு அல்லது ஆரம்பிப்பதற்கான ஆயத்தமோ இல்லாதிருத்தல் வேண்டும்.

iii. மாகாண அரசாங்க சேவையின் சேவைக் காலத்தினுள் அதற்கு ஏற்புடைய ஏதேனும் விடயம் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கையொன்று அந்த உத்தியோகத்தருக்கு எதிராக இல்லாதிருத்தல் வேண்டும்.

iv. ஏற்புடைய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அந்த உத்தியோகத்தரை மாகாண அரசாங்க சேவையிலிருந்து நிரந்தரமாக விடுவிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

v. உத்தியோகத்தரினால் புதிய நியமன அதிகாரியின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்கி மத்திய அரசாங்கத்தின் பதவியை ஏற்றுக்கொள்வதாகவும் தீவின் எந்தவொரு சேவை நிலையத்திலும் சேவையாற்றுவதற்கு இணங்குவதாகவும் சத்தியக் கடதாசி ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

03. அவ்வாறு இடமாற்றம் செய்யப்படும் உத்தியோகத்தரொருவரின் சேவைமூப்பு, உத்தியோகத்தர் மாகாண அரசாங்க சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்ட திகதியை மத்திய அரசாங்கத்தின் கீழுள்ள பதவியொன்றுக்கு ஆட்சேர்க்கப்பட்டாரெனக் கருதி தீர்மானிக்கப்படல் வேண்டும். ஆயினும், சேவைமூப்புக்கு புள்ளிகள் வழங்கப்படும் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய உயர் பதவியொன்றுக்கு பதவி உயர்வு வழங்கப்படும் பரீட்சையொன்றுக்குத் தோற்றுவதற்கு பின்வரும் சந்தர்ப்பங்களில் அன்றி மத்திய அரசாங்கத்தின் பதவியொன்றுக்கு உள்ளீர்க்கப்பட்டு மூன்று (03) வருடங்கள் செல்லும் வரையில் தகைமைப் பெறமாட்டார்.

i. எழுத்துமூலப் பரீட்சையொன்றின் மூலம் திறமை அடிப்படையில் பதவி உயர்வு வழங்கும் போது
ii. சாதாரண செயலாற்றுகையின் கீழ் ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கு பதவி உயர்வு வழங்கும் போது
iii. பதவி உயர்வுக்காக தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள போதியளவு உத்தியோகத்தர்கள் விண்ணப்பித்திருக்காத விடத்து
iv. இடமாற்றம் பெற்றுக்கொள்ளாது தொடர்ந்தும் மாகாண அரசாங்க சேவையின் பதவியில் இருந்திருப்பின் தகைமைப்பெறும் மத்திய அரசாங்கத்தின் பதவியொன்றுக்கு அல்லது நாடளாவிய சேவையொன்றுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அல்லது திறமை அடிப்படையிலான பிரிவின் கீழ் விண்ணப்பிக்கும் போது

04. மாகாண அரசாங்க சேவை மற்றும் மத்திய அரசாங்கத்தின் அரசாங்க சேவை ஒன்றுக்கொன்று வித்தியாசமான சேவைகள் என்பதனால் இவ்வாறான வேண்டுகோளொன்று தொடர்பில் நியமன அதிகாரி மற்றும் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு என்பன அன்னியோன்னிய இணக்கப்பாட்டின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

05. மேற்படி இடமாற்றம் செய்யப்படும் உத்தியோகத்தரொருவரின் நியமன அதிகாரி மற்றும் ஒழுக்காற்று அதிகாரி வித்தியாசப்படுவதனால் ஏற்புடைய புதிய சேவை நிபந்தனைகளுடன் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு அரசாங்க சேவையின் பதவியொன்றுக்கு உள்ளீர்க்கப்படுவதாக கடிதமொன்றை வழங்குதல் வேண்டும்.

06. இந்த ஏற்பாடுகள் வெளியிடப்படும் திகதிக்கு முன்னர் மாகாண அரசாங்க சேவையிலிருந்து மத்திய அரசாங்கத்தின் பதவிக்கு இடமாற்றம் பெற்றுள்ள முதலாவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு இந்த ஏற்பாடுகளுக்கு அமைய அரசாங்கப் பதவிக்கு இடமாற்றம் செய்யப்பட்ட திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் உள்ளீர்க்கப்படுவதாக கடிதமொன்றை வழங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எம்.ஏ.பீ. தயா செனரத்
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.